# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 04 செவ்வாய்க்கிழமை 20.08.2024 கதிர் 337












# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தை மூடிமறைக்க வேண்டாம்

## நீதி கோரி உறவுகள் புதைகுழி முன்பாக மாபெரும் போராட்டம்

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விடயத்தை மூடிமறைக்க வேண்டாம் எமக்கு நீதி வேண்டுமென கோரியும், கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப் புதைகுழிகளுக்கு நீதி விசாரணை கோரியும்காணாமல்போனோர்அலுவலகம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மீதான மேற்கொள்ளும் அச்சுறுத்தல்செயற்பாடுகளைகண்டித்தும் மாபெரும் போராட்டம் ஒன்று இன்று கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி முன்றலில் இடம்பெற்றது.

2➤

# மாகாண சபை அதிகாரத்தை வழங்காத வேட்பாளரை தமிழர் ஏற்கமாட்டார்கள்

## ஈ.பி.டி.பி. பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன்

இந்திய இலங்டகை ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையை அதிகாரம் வழங்காத எந்தவொரு வேட்பாளரையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தெரிவித்துள்ள என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் அவ்வாறான நிலைப்பாட்டை நிராகரிப்பவர்கள் வடக்கு கிழக்கு மக்களிடம் வாக்கு கேட்க வரவேண்டியதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ்ஊடகஅமையத்தில்இன்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2➤




# இலங்கை இந்திய கப்பல் சேவை வாரத்துக்கு 3 நாட்கள் மட்டுமே

நாகப்பட்டினத்திற்கும், காங்கேசன்துறைக்குமான பயணிகள் கப்பல் சேவை வாரத்தில் 3 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

எதிர்வரும் 31ஆம் திகதி வரையில் இந்த நடைமுறை காணப்படும் எனவும், பயணிகள் வருகை அதிகரிப்பின் அடிப்படையில், எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதி முதல் நாளாந்தம் கப்பல் சேவையை முன்னெடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது

இதற்கமைய, வாரத்தில் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய மூன்று தினங்களில் மாத்திரமே நாகப்பட்டினத்திற்கும், காங்கேசன்துறைக்குமான பயணிகள் கப்பல் சேவை முன்னெடுக்கப்படும்.

# தபால் மூலம் வாக்களிப்பதற்கு 7,36,589 பேர் விண்ணப்பம்

## 24,268 விண்ணப்பங்கள் நிராகரிப்பு




எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பதற்காக 736,589 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள தாகவும் அவற்றுள் 24,268 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய தேர்தல்கள் ஆணை யாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், 2024 ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க 712,321 பேர் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு செப்டம்பர் 04, 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, தபால் மூலம் வாக்களிக்க முடியாதவர்களுக்கு மேலதிக திகதியாக செப்டம்பர் 11 மற்றும் 12 ஆம் திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சஜித்துடன் இணைந்த அமைப்புக்கள் உடன்படிக்கையும் இன்று கைச்சாத்து

சிவில் அமைப்புகள், அரசியல், கலைஞர்கள் மற்றும் தொழில்சார் செயற்பாட்டாளர்கள் உட்பட பல குழுக்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துக்கொண்டன.

இதற்கான நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை பத்தரமுல்லையில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின்ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தலைமையில் நடைபெற்றது. இதன்போது புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவை வெற்றிக்கு ஆதரவளிக்கும் நோக்கில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், இலங்கை கள அதிகாரிகளின தொழிற்சங்கங்களின் ஒன்றியம், அகில இலங்கை தொழிற்சங்க கல்வி சாரா தொழிலாளர் சங்கம், தேசிய சிவில் அமைப்பு கூட்டு சங்கம், சிறிய மற்றும்நடுத்தர வர்த்தகர்கள் சங்கம் மற்றும் பல சிவில் அமைப்புக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டன.

## கொக்குத் தொடுவாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உண்மையைமௌனமாக்காதே:கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் சாட்சிகளை அச்சுறுத்தாதே, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி: ஸ்ரீ லங்கா இராணுவமே பொறுப்புக்கூற வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி இல்லை!, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இலங்கை இராணுவத்தின்பங்கை அம்பலப்படுத்துங்கள், வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட எமது அன்புக்குரியவர்களை எங்கே கொன்று புதைத்தீர்கள்? உள்ளிட்ட பல்வேறு கோசங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் ஏற்ப்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டத்தில் வடக்கு கிழக்கின் பல்வேறு மாவட்டங்களினை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் சமூக செயற்ப்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

## மாகாணசபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தென்னிலங்கையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் வடக்கு கிழக்கு ஒன்றிணையக் கூடாதென்றும் அதிகாரப் பகிர்வுக்கு என்றுமே இடமில்லை என்றும் பொலிஸ் காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் ஈழ மக்கள் ஜனநயகக் கட்சியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு -

“இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் தமிழருடைய அரசியலுரிமை பிரச்சினை அவ்வப்போது பேசப்பட்டுவந்தன. காலப்போக்கில் பல்வேறு ஒப்பந்தங்கள் பல்வேறு இணக்கப்பாடுகள் பல்வேறு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. அதில் முன்னேற்றங்கள் காணப்படாமையால் தரப்படுத்தலூடாக தமிழ் மக்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டம் தலைதூக்கியது. பல உயிர்த் தியாகங்கள் சொத்தழிவுகள் அங்கவீனங்கள் சொல்லெணா துயரங்களுக்கு பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக மாகாண அரசு முறைமை கொண்டுவரப்பட்டது.

13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக கிடைத்த அந்த குறைந்த அதிகாரம் கொண்ட மாகாண முறைமைக்கு அதிகாரங்களோ அதிகாரப் பகிர்வோ வழங்க மறுக்கும் ஜனாதிபதி வேட்பாளர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பிரசார நடவடிக்கைகளுக்கு வரத்தேவையில்லை. அவ்வாறான வேட்பாளர்களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள்” என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (O1)

# சிசிலி தீவுப் பகுதியில் மூழ்கிய படகில் இருந்த இலங்கையர்களில் ஒருவர் மீட்பு

சிசிலி தீவிற்கு அருகில் மூழ்கிய சொகுசு படகில் இருந்து 15 பேர் மீட்கப்பட்டுள்ள நிலையில் மீட்கப்பட்டவர்களில் இலங்கை பணியாளர் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. 22 பயணிகள் மற்றும் பணியாளர்களை ஏற்றிச் சென்ற பிரித்தானியக் கொடியுடன் கூடிய சொகுசுப் படகு நேற்று இத்தாலியின் சிசிலி தீவுக்கு அருகில் மூழ்கியது.

போர்டிசெல்லோ துறைமுகத்தில் இருந்து அரை மைல் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த இந்தக் கப்பல், அந்தப் பகுதியில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக மூழ்கியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், 6 பேர் காணாமல் போயுள்ள நிலையில், பிரித்தானிய கோடீஸ்வரரான மைக் லிஞ்ச் என்பவரும் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஜனாதிபதி தேர்தல் குறித்து நேற்று 35 முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் அதாவது, ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி மட்டும் 35 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத்தேர்தல்ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி வரை 666 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்நிலையில், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 349 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 293 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

# இந்திய கடனுதவியே வரிசை யுகத்தில் இருந்து நாட்டை மீட்டது ரணில் அல்ல

## பிரசார கூட்டத்தில் மனோ கணேசன்

இலங்கை ரூபா பெறுமதியில், 120,000 இலட்சம் ரூபாய்களுக்கு நிகரான, 400 கோடி அமெரிக்கா டாலர் தொடர் கடன் (Indian Credit Line) நிதி உதவியை இந்திய அரசு தந்ததால்தான், பெட்ரோல், உணவு, காஸ், மருந்து வரிசைகள், மின்வெட்டுகள், உர தட்டுபாடு ஆகியவற்றில் இருந்து எமது நாடு காப்பாற்றபட்டது. இந்த உண்மையை மறைத்து ரணில் விக்கிரமசிங்க நரித்தனமாக பேசி தெரிகிறார்.

இலங்கைக்கு இந்திய அரசின் தொடர் கடன் (Indian Credit Line) நிதி உதவி வழங்க வேண்டும் என இந்திய அரசு, 2021ம் வருடம், டிசம்பர் மாதம், கொள்கைரீதியாக முடிவு எடுத்தது. இவை ரணில் ஆட்சிக்கு வர முன்னர் தீர்மானிக்க பட்டவை. அதன் பிறகு, 2022ம் வருட மே மாதம் பிரதமராகவும், ஜூலை மாதம் ஜனாதிபதியாகவும் ரணில் பதவிகளை ஏற்றார். ரணில் பதவிக்கு வந்து இவற்றை பயன்படுத்தினார்.

ரணில் பதவிக்கு வந்து சுய முயற்சியால் இவற்றை கொண்டு வரவில்லை. இந்த உதவிகள் இந்திய அரசு, இலங்கை மக்களுக்கு, இலங்கை நாட்டுக்கு வழங்கிய பெரும் உதவிகளாகும்.

இதனாலேயே, இந்நாட்டில் அத்தியாவாசிய பொருள் வரிசைகள் நின்றன. மின் வெட்டு நின்றது. விவசாயத்துக்கு தேவையான உரம் கூட ஓமன் நாட்டில் இருந்து இந்திய கடனுதவி நிதி மூலம் பெற இந்திய அரசு அனுமதி தந்தது. இதுதான் உண்மை. இதை மறுக்க முடியுமா என சரடு விடுபவர்களுக்கும், உண்மை தெரியாமல் பேசி திரிபவர்களுக்கும் நான் சவால் விடுகிறேன் என, மாவனல்ல, ருவன்வெல்ல ஆகிய இடங்களில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாச பிரசார கூட்டங்களில் உரையாற்றிய தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

மனோ கணேசன் எம்பி மேலும் கூறி உள்ளதாவது

இந்திய தேசம்தான், எமது நாட்டை காப்பாற்றியது என்ற அடிப்படை உண்மையை மறைத்து தான் ஏதோ நாட்டை காப்பாற்றியது போல் போகும் இடமெல்லாம் ரணில் விக்கிரமசிங்க கூறி வருகிறார்.

இந்த பொய்யை அவரது எடுபிடிகளும் கூறி வருகிறார்கள். நாட்டில் ஒரு தரப்பினர் உண்மை தெரியாமல் இதை நம்புகிறார்கள்.

இலங்கை ரூபா பெறுமதியில், 120,000 இலட்சம் ஷரூபாய்களுக்கு நிகரான 400 கோடி அமெரிக்கா டாலர் தொடர் கடன் (Indian Credit Line) நிதி உதவியை இந்திய ஒன்றிய அரசு எமது நாட்டுக்கு வழங்கியது. அதேபோல் 400 கோடி இலங்கை ரூபா பெறுமதியான உணவு பொருட்களை இந்திய தமிழ்நாடு மாநில அரசு எமக்கு வழங்கியது.

இவற்றால்தான்தான் எமது வரிசைகளில் நீங்கின. இவை ரணில் ஆட்சிக்கு வர தீர்மானிக்க பட்டவை. இந்த உதவிகள் இந்திய அரசு, தமிழக அரசு, இலங்கை மக்களுக்கு, இலங்கை நாட்டுக்கு வழங்கிய பெரும் உதவிகளாகும்.

ரணில் பதவிக்கு வந்து அவற்றை பயன்படுத்தினார். ரணில் பதவிக்கு வந்து சுய முயற்சியால் இவற்றை கொண்டு வரவில்லை. ஆனால், இவை தனது சாதனைகள் என ரணில் வழமை போல் நரித்தனமாக கூறி வருகிறார்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# பிரதான வேட்பாளர்களை தவிர்ந்த ஏனையோர் களமிறங்கியது ஏன்?

## கண்காணிப்பு அமைப்புக்கள் வெளியிடும் தகவல்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களை தவிர்த்து ஏனையோர் தாம் தோல்வியடைவோம் என்பது தெளிவாகத் தெரிந்திருந்தும் தனிப்பட்ட சில நோக்கங்களுக்காக ஜனாதிபதி வேட்பாளர்களாக களமிறங்கியுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த காலங்களில் இல்லாதளவுக்கு அதிகளவான வேட்பாளர்கள் இம்முறை களமிறங்கியிருக்கும் நிலையில் அது தொடர்பில் ஆய்வு ஒன்றை நடத்தி இது குறித்த தகவல்களை கண்காணிப்பு அமைப்புக்கள் வெளியிட்டுள்ளன.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். இவர்களில் இரண்டு அல்லது மூன்று வேட்பாளர்கள் மட்டுமே தேர்தலில் வெற்றிபெறுவதை இலக்காகக் கொண்டு போட்டியிடுகின்றார்கள். ஏனையவர்கள் வெவ்வேறு நோக்கங்களுடன் போட்டியிடுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தூதுவர் உள்ளிட்ட தூதரகப் பதவிகளை பெற்றுக் கொள்ளுதல், வெளிநாட்டுப் பயணங்களின்போது அதிக அங்கீகாரம் பெறுதல், ஆளுநர் உள்ளிட்ட ஏனைய பதவிகளை பெற்றுக் கொள்ளுதல், அடுத்த தேர்தலில்

போட்டியிடுவதற்கான அடித்தளத்தை உருவாக்குதல், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுடன் இணைந்து கொள்ளுதல், தேர்தல் கண்காணிப்பாளர் பதவியை பெற்றுக் கொள்ளல், ஊடக விளம்பரங்களை பெற்றுக்கொள்ளல், மற்றொரு வேட்பாளரை பிரசாரப்படுத்தல் மற்றும் மற்றொரு வேட்பாளருக்கான வாக்குகளைப் பிளவுபடுத்துதல் போன்றவற்றுக்காக 90 வீதமான வேட்பாளர்கள் களமிறங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் பிரதான வேட்பாளர்களின் பினாமிகளாக மூன்று வேட்பாளர்கள் செயற்படுவதாகவும் இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாக மேலதிக ஒவ்வொரு வேட்பாளருக்கும் சுமார் 2 கோடி ஷரூபா மேலதிக செலவை தேர்தல்களை ஆணைக்குழு ஏற்க நேரிடுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் 1982 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலிகளில் இதுவரை இரண்டு பிரதான வேட்பாளர்களிடையே போட்டி நிலவி வந்திருக்கின்றது.

இவ்வருடம் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களாக 39 பேர் களமிறங்கியுள்ளனர். 1982 இல் 6 வேட்பாளர்களும், 1988 இல் 3 வேட்பாளர்களும், 1994 இல் 6 வேட்பாளர்களும், 1999 இல் 13 வேட்பாளர்களும், 2005 இல் 13 வேட்பாளர்களும் 2010 இல் 22 வேட்பாளர்களும், 2015 இல் 22 வேட்பாளர்களும், 2019 இல் 35 வேட்பாளர்களும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்தாலும் பிரதான இரு வேட்பாளர்களிடையே மாத்திரம் போட்டி நிலவியமை குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பு குழு தேர்தல் பணிக்காக இலங்கை வந்தது

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவின் சார்பில், ஒரு பிரதித் தலைமை கண்காணிப் பாளர் மற்றும் 09 தேர்தல் நிபுணர்கள் அடங்கிய குழு கடந்த 13ஆம் திகதி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் 26 நீண்ட கால கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடவுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

மேலும், இந்தக் குழுவினர் தேர்தல் பிரசாரங்கள் தொடர்பில் கண்காணிப்புகளை மேற்கொள்வதற்காக நாடு முழுவதும் அனுப்பி வைக்கப்படவுள்ளதா கவும் அதன்பிறகு, தேர்தல் வாரத்தில் 32 குறுகிய கால கண்காணிப்பாளர்கள் கண்காணிப்புப் பணிகளை வலுப்படுத்துவார்கள் என்றும் இவர்கள் தேர்தல் செயல்முறை முடியும் வரை நாட்டில் கடமையில் ஈடுபடுவார்கள் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருக்கிறது.

இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் வெளிப்படையான அழைப்பின் பேரில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு பணிக்குழாம் ஒரு தலைமைப் பார்வையாளரால் வழிநடத்தப்படும். இந்த கண்காணிப்புக் குழு வெவ்வேறு குழுக்களைக் கொண்டுள்ளது.

தேர்தல் கண்காணிப்பு தொடர்பான ஐரோப்பிய ஒன்றிய முறைமைக்கு இணங்க, தூதுக்குழு பூர்வாங்க அறிக்கையை வெளியிடும் மற்றும் தேர்தலுக்குப் பிறகு கொழும்பில் செய்தியாளர் மாநாட்டை நடத்தும். எதிர்கால தேர்தல் செயல்முறைகளுக்கான பரிந்துரைகள் உட்பட இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, முழு தேர்தல் செயல்முறையும் இறுதி செய்யப்பட்ட பிறகு தேசிய அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும்.

இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பை ஏற்று, செப்டெம்பர் 21 இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இலங்கைக்கு தேர்தல் கண்காணிப்புப் பணிக்குழுவை அனுப்ப ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது. இதற்கு முன்னர் ஆறு சந்தர்ப்பங்களில் கண்காணிப்பாளர்களை அனுப்பியுள்ளது.

வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான யூனியனின் உயர் பிரதிநிதியும் ஐரோப்பிய ஆணையத்தின் துணைத் தலைவருமான ஜோசப் பொரெல், ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் நாச்சோ சான்செஸ் அமோர் என்பவரை தலைமைப் பார்வையாளராக நியமித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.




# ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் செலவிடக்கூடிய தொகை?

## வர்த்தமானி மூலம் அறிவிப்பு

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது ஒவ்வொரு வாக்காளருக்காகவும் செலவிடக்கூடிய அதிகபட்ச தொகையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்கவினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் ஒரு வாக்காளருக்கு செலவழிக்கக்கூடிய அதிகபட்ச தொகை 109.00 ஷரூபாவென அந்த வர்த்தமானியில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானியின் படி, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் மொத்த செலவினமாக 186 கோடியே 82 இலட்சத்து 98 ஆயிரத்து 500 ஷரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# இணையச் சீண்டலுக்கு தீர்வு லெவின்ஸ்கி காட்டிய வழி!

**சைபர் சிம்மன்**

சமூக ஊடக யுகத்தில் நாம் வாழ்கிறோம். அதன் பலன்களையும், விளைவுகளையும் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். பதிவுகளும், குறும்பதிவுகளும், நிலைத்தகவல்களும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் நிலையில், ஒரு நீள் கட்டுரை என்னவெல்லாம் செய்யக்கூடும் என்பதைத் தெரிந்துகொள்வது நல்லது.

ஒருவரது வாழ்க்கையை மாற்றிய அந்த நீள் கட்டுரை ஓர் ஊடகத்தில் வெளியானது என்பதை இங்கே தனித்துக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அந்தக் கட்டுரை வெளியான பத்தாண்டுகளைக் கொண்டாடும் வகையில், அதை எழுதியவர் நன்றி பொங்க மற்றொரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

'ஒருபோதும் நம்பிக்கை இழக்காதீர்கள்' என நம்பிக்கைச் செய்தியையும் சொல்லியிருக்கிறார். அந்தக் கட்டுரையை எழுதியவர் மோனிகா லெவின்ஸ்கி. கட்டுரை வானிடி ஃபேர் (ஏயபெைவல குயசை) இதழில் 2014இல் வெளியானது. கட்டுரையின் தலைப்பு – 'அவமானமும், பிழைத்திருப்பதும்' (ளூயஅந யனெ ளூரசஎஎையட). இந்தக் கட்டுரை லெவின்ஸ்கியின் வாழ்க்கையை மாற்றியது மட்டும் அல்ல, அவரைப் போன்ற பலரது வாழ்க்கை மாற்றத்துக்கான நம்பிக்கைக் கீற்றை அளித்துள்ளது. இணைய, சமூக ஊடக யுகத்தில் இது மிகவும் இன்றியமையாதது.

லெவின்ஸ்கியின் விக்கிபீடியா பக்கம் அல்லது எக்ஸ் (ருவிட்டர்) பக்க அறிமுகங்களைப் பார்க்கலாம். இணையச் சீண்டலுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் செயல்பாட்டாளராக அவர் இயங்கிக்கொண்டிருக்கிறார். இதற்கு அவருக்கு முழுத் தகுதியும் இருக்கிறது. ஏனெனில், அவர் இணையச் சீண்டலின் முழுப் பாதிப்பையும் உணர்ந்தவர். உண்மையில், இணையத்தால் முதலில் பாதிக்கப்பட்டவர்களில் அவரும் ஒருவர்.



சொல்லடிகள், கேலி, கிண்டல், வசைகளை எதிர்கொண்டவர் அவர். இணையத்தின் மீது மட்டும் குறை சொல்வதற்கு இல்லை. நிஜ உலகில் நடந்ததன் விளைவு அது. ஆனால், இணையம் அதை மோசமாகப் பிரதிபலித்து, பல மடங்கு பெரிதாக்கி அவமான வெளிச்சத்தில் அவரை நிற்கவைத்துவிட்டது.

பழைய வரலாற்றை அறிந்தவர்களுக்கு, அப்போதைய அமெரிக்க அதிபர், மோனிகா லெவின்ஸ்கி உறவு தொடர்பான விவகாரத்தையும் அதன் அதிர்வுகளையும் இப்படிக் குறிப்பிடுவது புரிந்திருக்கும். இந்த விவகாரத்தை இப்படித் தாமதமாகக் குறிப்பிடக் காரணம், லெவின்ஸ்கியை அதற்காக மட்டும் முதன்மையாக நாம் நினைவில் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான்.

நடந்த விவகாரத்தைச் சுருக்கமாகப் பார்க்கலாம். பில் கிளின்டன் அதிபராக இருந்தபோது, அதிபர் மாளிகையில் லெவின்ஸ்கி பயிற்சி ஊழியராக இருந்தார். அந்தக் காலக்கட்டத்தில், கிளின்டனுக்கும் அவருக்கும் இடையே உறவு ஏற்பட்டதாகத் தகவல் வெளியாகி, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதேவேளையில், அந்தத் தகவலை அறிந்திருந்தும் அதை உறுதிப்படுத்த முடியாததால் அமெரிக்காவின் முன்னணி ஊடகங்கள் அதை வெளியிடவில்லை இந்தத் தகவல் வெளியாகக் காரணமானவர் ஒரு வலைப்பதிவர் என்பது கவனிக்க வேண்டிய விஷயம்.

லெவின்ஸ்கி தொடர்பான சர்ச்சையின் விளைவாக, அதிபர் கிளின்டனுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. எனினும், அவர் பதவி தப்பியது. ஆனால், மோனிகா லெவின்ஸ்கி சிக்கிக்கொண்டார். கடுமையாகக் கேலி செய்யப்பட்டார் பாலியல் நோக்கிலான வசைகளையும் எதிர்கொண்டார்.

ஏனெனில், இளம்பெண்ணான அவரது அடையாளம், ஆளுமை சார்ந்தோ, திறமை சார்ந்தோ அமையாமல், ஒரு பாலியல் சர்ச்சையை அடிப்படையாகக்கொண்டிருந்தது. கிளின்டன் உள்படப் பல அமெரிக்க அதிபர்கள் பிரச்சினையில் சிக்கியிருக்கின்றனர். அவர்கள் அதை எதிர்கொண்ட விதம் இங்கு முக்கியம் இல்லை. ஆனால், இந்த விவகாரம் பாலியல் சார்ந்தது என்பதால், அதில் தொடர்புடைய இளம் பெண் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இணையம் என்னும் ஊடகம் பொதுமக்கள் மத்தியில் பிரபலமாகத் தொடங்கிய காலக்கட்டம் அது. இணையவெளி ஏற்படுத்திக் கொடுத்த சாத்தியத்தையும், சுதந்திரத்தையும் கொண்டு, எல்லோரும் லெவின்ஸ்கி விவகாரம் பற்றி எல்லை மீறி விவாதித்தனர். பலருக்கும் இதில் உள்நோக்கம் இல்லை என்றாலும், ஒட்டுமொத்த நோக்கில் இது லெவின்ஸ்கியைப் பாதித்தது.

அவரால் அந்த அடையாளத்தைவிட்டு வெளியே வர முடியவில்லை. பொது இடத்தில் இகழப்பட்டார். வேலை கிடைக்காமல் புறக்கணிக்கப்பட்டார். இதிலிருந்து அவர் மீண்டு வர முடியாமலே போயிருக்கலாம். ஆனால், 2014ஆம் ஆண்டு வானிடி ஃபேர் கட்டுரை மூலம் அவருக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது.

இந்த விவகாரத்தில் தனது தரப்பை விளக்கிக் கூறும் வாய்ப்பை முதன்முதலாகப் பெற்ற லெவின்ஸ்கி, கேலி, கிண்டல், அவமானத்தின் வலியை வெளிப்படுத்தி, அதுவரை தன்னை வரையறை செய்த அந்தச் சம்பவத்தின் விலங்கை உடைக்கும் வகையில் அந்தக் கட்டுரையை எழுதினார்.

இனியும் தன்னைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையுடனும் இணையம் சுமத்திய அடையாளத்துடனும் முடங்கிவிடாமல், எல்லாவற்றையும் உதறி, கடந்தகாலத் தவறில் இருந்து மீண்டுவந்த ஒரு பெண்ணின் உணர்வுகள் பற்றிப் பேசினார். இந்தக் கட்டுரை அவரை, அவரைப் போன்றவர்களின் வலியைப் புரியவைத்தது.

அதன் பிறகு கேலிகளைப் புறந்தள்ளிப் பொதுவெளியில் வரத் தொடங்கினார். இடைப்பட்ட காலத்தில் இணையக் கேலிகளுக்கும், சீண்டலுக்கும் பலர் பலிகடா ஆக்கப்படுவது அதிகரித்த நிலையில், இணையச் சீண்டலுக்கு ஆளானவர்களுக்காகக் குரல் கொடுத்து வருகிறார். "இதிலிருந்து மீண்டு வரலாம், நானே முன்னுதாரணம்" என்று சொல்லி வருகிறார்.

இந்த மாற்றத்தை உண்டாக்கிய கட்டுரைக்கு நன்றி தெரிவித்து, மாற்று முடிவுகளின் சாத்தியம் பற்றிப் பேசியிருக்கிறார். ஆம், மற்றவர்களும், சமூகமும் திணிக்கும் முடிவுகளைப் புறந்தள்ளி நல்ல மாற்று முடிவுகளை அமைத்துக்கொள்ளலாம்... நம்பிக்கை இழக்க வேண்டாம் என்பதே அவரது செய்தி.





# நாடாளுமன்றம் நாளை கூடும் நிலையில் கட்சித் தாவல்கள் இடம்பெறும் வாய்ப்பு!

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ள நிலையில் இந்த வாரம் கட்சித் தாவல்கள் நிறைந்த வாரமாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான பேரங்கள் திரைமறைவில் இடம்பெற்றுவருவதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்திருக்கும் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக கட்சித் தாவவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இதுவரை காலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துவந்த சிலர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து எதிர்க்கட்சி பக்கம் தாவவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர்களிடையே சிறுபான்மை கட்சிகளை சேர்ந்த சிலரும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஏற்கனவே ஜனாதிபதிக்கு ஆதரவாக சென்ற பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் சிலர் நாமல் ரஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து மீண்டும் கட்சித் தலைமையகம் செல்வதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த வாரத்தில் நாடாளுமன்ற அமர்வு நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள நிலையில், அதன்போது சிலர் தமது நிலைப்பாடுகளை அறிவிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுவதுடன் அடுத்துவரும் நாடாளுமன்ற அமர்வுகளின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் ஆசனங்கள் இடமாற்றப்படலாம் என்றும் கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு கிடைக்காது

## தமது நிலைப்பாடு அதுதான் என்கிறார் நாமல்



வடக்கும் கிழக்கும் இணையக் கூடாது என்பதே தமது நிலைப்பாடு என்று தெரிவித்திருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது என்றும் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார். இதுவே தமது நிலைப்பாடு என்றும் ஜனாதிபதித் தேர்தலுக்காக தமது இந்த நிலைப்பாட்டை மாற்றப்போவதில்லை என்றும் அவர் உறுதியாகக் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ஷ களனிப் பகுதியில் நேற்று தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்திருந்தார். இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே, மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது என்றும் வடக்கு கிழக்கு இணைக்கப்படாது என்றும் நாமல் ராஜபக்ஷ திட்டவட்டமாகக் கூறினார்.

ஊடவியலாளர்களிடம் தொடர்ந்து பேசிய போது, வட மாகாண இளைஞர்கள் தன் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் என்று தெரிவித்த நாமல் ராஜபக்ஷ, "ஐக்கிய இலங்கை என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் தொடர்ந்தும் உள்ளோம்" என்றும், "வடக்கு கிழக்கு ஒன்றிணையக் கூடாது என்ற நிலைப்பாடே எம்மிடம் உள்ளது. பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் பரவலாக்கப்படக் கூடாது என்ற கொள்கையே பேணப்படுகிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

"ஏனைய கட்சிகளைப் போன்று தேர்தல் காலங்களின் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காகக் கொள்கையை மாற்றப் போவதில்லை. இது வடக்கு இளைஞர்களுக்கும் நன்கு தெரியும்" என்றும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.



# கவனிப்பாரற்றுக் கிடக்கும் சனசமூக நிலையம்

(வி.ரி. சகாதேவராஜா)



துறைநீலாவணை தெற்கு 1ஆம் வட்டாரத்தில் அமைந்திருக்கின்ற அண்ணா சனசமூக நிலையம் நாளுக்கு நாள் தூர்ந்து பாழடைந்து வருகிறது. இதில் சமூகம்வெறுக்கும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு களம் அமைய வாய்ப்புள்ளது.

1986 களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் பூ.கணேசலிங்கத்தின்நிதிஉதவியோடு கட்டியெழுப்பப்பட்ட இக் கட்டடம் அன்று சில பத்திரிகைகளோடு வாசிகசாலையாக திறம்பட இயங்கி வந்தது. களுதாவளை மண்முனை தென்எருவில்பற்றுபிரதேச சபையின் நிருவாகத்தின் கீழ் இச் சனசமூக நிலையம் உள்ளது.

இடை நடுவில் நாட்டுச் சூழல் காரணமாக வன்முறை காலகட்டத்தில் கட்டிடம் பாதுகாப்பு காவலரண் போன்று செயற்பட்டும் வந்தது. அதன் காரணமாக அது பாழடைய ஆரம்பித்தது.

இன்று மோசமான நிலையிலேயே கூரையும் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. கதவுகள்ஜன்னல்கள் அகற்றப்பட்ட நிலையில் பாழடைந்து வருகிறது. ஆடு மாடுகள் உறையும் இடமாக மாறியுள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள இக் கட்டடத்தை புனரமைக்க சுமார் 40 லட்சம் ஷரூபாய் தேவையென மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பூ.நவரெத்தினராசா(ஓய்வு நிலை அதிபர்) தெரிவித்தார்.

எனவே இந்த கட்டிடத்தை புனரமைத்து இந்த பகுதி வாழ் மக்களுக்கு உரிய சேவையை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப் பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி அமைப்பாளர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று தலைவர் பூ. நவரெத்தினராசா வேண்டுகோள் விடுக்கிறார்.









## "கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டுவோம்" மாணவர்களுக்கு கல்வி கருத்தரங்கு

கிழக்கு இளைஞர் அமைப்பு மற்றும் மயோன் கல்வி அபிவிருத்தி அமைப்பு என்பன இணைந்து ஒழுங்கு செய்திருந்த "சிறுவர் கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டுவோம் " எனும் தொனிப்பொருளில் அமைந்த 5 ஆம் ஆண்டு புலமைப்பரில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச மீட்டல் கருத்தரங்கு மாளிகைக்காடு பாவா ரோயல் வரவேற்பு மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

கிழக்கு இளைஞர் அமைப்பின் ஸ்தாபக தலைவர் தானிஸ் றஹ்மத்துல்லா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மயோன் கல்வி அபிவிருத்தி அமைப்பின் தவிசாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இக் கருத்தரங்கில் ஆசிரியர்களான எம். எச்.எம்.சதாத் மற்றும் எம்.ஐ.முறாத் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

## களனி இளைஞர் கொலை: 24 வயது இளைஞர் கைது!

பேலியகொட, பிரதேசத்தில் வீடொன்றுக்கு அருகில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி இந்த தாக்குதல் நடத்தப்பட்டதுடன், தாக்குதலில் காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில்நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் களனி, நாரம்மினிய வீதியில் வசிக்கும் 39 வயதுடையவராவார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் கொட்டுகச்சிய பிரதேசத்தை சேர்ந்த 24 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பேலியகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.






## கனேடிய பல்கலைக்கழக பிரதிநிதியுடன் சந்திப்பு

மாணவர்கள் இலங்கையில் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்து விட்டு, பின்னர் கனடா நாட்டில் அவர்களது மேற்படிப்பை தொடர்வது சம்பந்தமான கலந்துரையாடல் கொழும்பிலுள்ள மெட்ரோ பொலிடன் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் மெட்ரோ பொலிடன் கல்லூரியின் தவிசாளர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் மற்றும் கனேடிய வோட்டர் லூ பல்கலைக்கழகத்தின் பிரதிநிதி திருமதி ஒஸ்மன் உட்பட கல்லூரியின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

## கனடா வேலைவாய்ப்பு: மோசடித் தம்பதி கைது

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக எதிர்பார்த்திருப்பவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு கனடாவில் தொழில் பெற்றுத் தருவதாக பொய் வாக்குறுதி அளித்து இலட்சக்கணக்கான பணத்தை பெற்று மோசடி செய்த கணவன் மனைவியை சந்தேகத்தில் கட்டான பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எகலியகொட, ஹெடஹெக்த, போஹெத் சூதவில் வசித்து வந்த தம்பதியினரையே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நீர்கொழும்பு, கட்டான, வென்னப்புவ பிரதேசங்களைச் சேர்ந்த நபர்சூகளிடம் சுமார் ஒரு கோடி ஷரூபா பணத்தை பெற்றுக்கொண்டு தலைமறைவாகியுள்ளசூதாக கட்டான பொலிஸ் நிலையத்தில் ஐந்து முறைப்பாடுகளும், நீர்கொழும்பு பொலிஸில் ஒரு முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளன.

இவர்களிடம் பெறப்பட்ட பணத்தை சந்தேகநபரான பெண்ணின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சையின் பின் மரணம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தையில் மரக்கறி வாங்குவதற்கு சென்ற முதியவர் முச்சக்கரவண்டி மோதி மரணம் அடைந்துள்ளார். ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி யாழ்ப்பணம் பகுதியைச் சேர்ந்த சின்னையா இரத்தினசிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த மாதம் 22 ஆம் திகதி சிவன் வீதியூடாக, திருநெல்வேலி சந்தையில் மரக்கறி வாங்குவதற்காக துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தார்.

இந்நிலையில் இவர் எதிர் திசையில் வந்த முச்சக்கரவண்டி மோதி அவ்விடத்தில் மயக்கம் அடைந்து பின் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சையின் பின்னர் கடந்த மூன்றாம் திகதி வீடு திரும்பினார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளார். தலையில் அடிபட்டதாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனை அறிக்கைகளில் தெரியவந்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2024இல் வெளியிடப்பெற்றது.